# அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை – 600 006

## மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு மார்ச் – 2024

## உயிரி – விலங்கியல் விடைக்குறிப்புகள்

மொத்த மதிப்பெண்கள்: 35

குறிப்பு :-

1. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.
2. படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.
3. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.

பிரிவு – 1 (மதிப்பெண் 8X1=8)

| வினா எண் | குறியீடு | வகை – A | வினா எண் | குறியீடு | வகை – B |
|---|---|---|---|---|---|
| 1 | ஈ | பரிணாம மற்றும் மரபுவழி | 1 | அ | கூற்றும் காரணமும் சரி மற்றும் சரியாக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது |
| 2 | இ | மூச்சுக்காற்று அளவு + உட்சுவாச சேமிப்புக் கொள்ளளவு + வெளிச்சுவாச சேமிப்புக் கொள்ளளவு | 2 | அ | காய்டர் |
| 3 | ஆ | பால்மமாதல் | 3 | ஈ | லிம்பிக் மண்டலம் |
| 4 | ஈ | பௌமானின் கிண்ண உட்சுவரில் | 4 | இ | மூச்சுக்காற்று அளவு + உட்சுவாச சேமிப்புக் கொள்ளளவு + வெளிச்சுவாச சேமிப்புக் கொள்ளளவு |
| 5 | அ | காய்டர் | 5 | ஈ | பௌமானின் கிண்ண உட்சுவரில் |
| 6 | ஈ | லிம்பிக் மண்டலம் | 6 | ஈ | பரிணாம மற்றும் மரபுவழி |
| 7 | அ | கூற்றும் காரணமும் சரி மற்றும் சரியாக பொருத்தப்பட்டுள்ளது | 7 | அ | மொசைக் |
| 8 | அ | மொசைக் | 8 | ஆ | பால்மமாதல் |



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | பிரிவு – 2<br>குறிப்பு –எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி | | 4X2=8 |
| 9 | **<u>டெட்டனி</u>**<br>• பாரா தைராய்டு ஹார்மோன்(PTH) பற்றாக்குறையின் காரணமாக உடலில் கால்சியம் அளவு குறைகிறது. | | 2 |
| 10 | **தவளையில் காணப்படும் சுவாச முறைகள்**<br>• தோல் சுவாசம்<br>• நுரையீரல் சுவாசம்<br>• வாய்க்குழி சுவாசம்<br>**(ஏதேனும் இரண்டு)** | | 2 |
| 11 | பயன்தரும் பாக்டீரியா – புரோபையோடிக் பாக்டீரியா<br>நோயூக்கி பாக்டீரியா – நோயை உண்டாக்கும் பாக்டீரியா | | 2 |
| 12 | • புறநாசித் துளைகள் ⟹ நாசிக்குழி ⟹ தொண்டை ⟹ குரல்வளை ⟹ மூச்சுக்குழல் | | 2 |
| 13 | மனிதனின் பற்சூத்திரம் = $\frac{2123}{2123} \times 2$ | | 2 |
| 14 | **<u>சுடர்செல்கள்</u>**<br>• தட்டைப்புழு தொகுதியில் சுடர்செல்களால் கழிவுநீக்கமும் ஊடுகலப்பு ஒழுங்குபாடும் சிறப்பு தன்மை வாய்ந்த செல்களால் நடைபெறுகின்றன. | | 2 |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவு – 3<br>குறிப்பு – எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி<br>வினா எண் 19 க்கு கட்டாயமாக விடையளிக்கவும் | | 3X3=9 |
| 15 | (see table below) | $1\frac{1}{2}$<br>$1\frac{1}{2}$ | 3 |

| வெள்ளை அடிப்போஸ் திசு | பழுப்பு அடிப்போஸ் திசு |
|---|---|
| தோலடித்திசுவாகவும், சிறுநீரகம், கண்கோளம், இதயம் ஆகிய உறுப்புகளைச் சூழ்ந்தும் அடிப்போஸ் திசு காணப்படுகிறது. | பழுப்பு கொழுப்பில் அதிகமான மைட்டோகாண்ட்ரியாக்களைக் கொண்டுள்ளது. |
| ஊட்டச்சத்துக்களை சேமிக்கும் இடம் வெள்ளை கொழுப்பு. | இரத்த ஓட்டத்தையும், உடலையும் வெப்பப்படுத்தும் அமைப்பாகச் செயல்படுகிறது. பிறந்த குழந்தையின் உடலில் நடுக்கத்தை ஏற்படுத்தாமல் வெப்பத்தை உயர்த்துகிறது. |

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

<table>
<tr>
<td>16</td>
<td>
<u>நலமான கால்நடைகளை கண்டறியும் முறைகள்</u>
<ul>
<li>நல்ல முறையில் உண்டு, நீர் அருந்தி, நல்ல முறையில் உறங்கும்</li>
<li>நல்ல பொலிவு,</li>
<li>சுறுசுறுப்பு,</li>
<li>மிகை விழிப்புணர்வு,</li>
<li>பளப்பளப்பான தோல்</li>
</ul>
<u>(ஏதேனும் 2 மட்டும்)</u><br>
<u>கால்நடை நோய்கள்</u>
<ul>
<li>ரின்டர் பெஸ்ட்</li>
<li>கால் மற்றும் வாய் நோய்</li>
<li>பசு அம்மை</li>
<li>ஆந்த்ராக்ஸ் மற்றும் இரத்தக் கசிவுடன் காய்ச்சல் (ஏதேனும் 2 மட்டும் )</li>
</ul>
<u>(ஏதேனும் 2 மட்டும்)</u>
</td>
<td>2<br><br>1</td>
<td>3</td>
</tr>
<tr>
<td>17</td>
<td>
<u>இதய ஒலிகள் –</u>
<ul>
<li>இதயச் சுழற்சியின் போது வால்வுகளின் இயக்கத்தால் உருவாகும் ஒலிகள்.</li>
</ul>
<u>1. லப் ஒலி உண்டாகும் முறை</u>
<ul>
<li>வென்ட்ரிக்கிள்கள் சுருங்கும் போது ஈரிதழ் மற்றும் மூவிதழ் வால்வுகள் மூடுவதல் ஏற்படுகிறது.</li>
</ul>
<u>2. டப் ஒலி உண்டாகும் முறை</u>
<ul>
<li>வென்ட்ரிக்கிள்கள் சிஸ்டோல் முடிவில் அரைச்சந்திர வால்வுகள் மூடுவதால் டப் என்ற ஒலி தோன்றல்.</li>
</ul>
</td>
<td>1<br><br>1<br><br>1</td>
<td>3</td>
</tr>
<tr>
<td>18</td>
<td>
<table>
<tr><th>அட்ரீனல் கார்டெக்ஸ் அடுக்குகள்</th><th>சுரக்கும் ஹார்மோன்கள்</th></tr>
<tr><td>சோனா குளோமருலோசா</td><td>தாது கலந்த கார்டிகாய்டுகள்</td></tr>
<tr><td>சோனா பாஸிகுளேட்டா</td><td>குளுக்கோ கார்டிகாய்டுகளான கார்டிசோல், கார்டிகோஸ்டிரோன், குறைந்த அளவு ஆன்ட்ரோஜன், ஈஸ்ட்ரோஜன்</td></tr>
<tr><td>சோனா ரெட்டிகுலாரிஸ்</td><td>அட்ரீனல் ஆன்ட்ரோஜன் குறைந்த அளவு ஈஸ்ட்ரோஜன் மற்றும் குளுக்கோகார்டிகாய்டுகள்</td></tr>
</table>
</td>
<td>1<br><br>1<br><br>1</td>
<td>3</td>
</tr>
<tr>
<td>19</td>
<td>
<table>
<tr><th>ஊடுகலப்பு ஒத்தமைவான்கள்</th><th>ஊடுகலப்பு ஒழுங்கமைவான்கள்</th></tr>
<tr><td>சுற்றுச்சூழலுக்கேற்ப தங்கள் உடலின் ஊடுகலப்பு அடர்த்தியை மாற்றிக் கொள்வன</td><td>புறச்சூழலின் தன்மை எப்படி இருந்தாலும் தங்கள் உடலின் ஊடுகலப்பு அடர்த்தியை மாற்றாமல் நிலையான அளவுடன் வைத்திருப்பவைகள்</td></tr>
<tr><td>எ.கா. கடல்வாழ் மெல்லுடலிகள் (ம) சுறா</td><td>எ.கா. நீர் நாய்</td></tr>
</table>
</td>
<td>$1\frac{1}{2}$<br><br>$1\frac{1}{2}$</td>
<td>3</td>
</tr>
</table>

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | பிரிவு 4 அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் | | 2X5=10 |
|---|---|---|---|

**20 அ**

| முதுகு நாணுடைய விலங்குகள் | முதுநாணற்ற விலங்குகள் |
|---|---|
| முதுகுநாண் உண்டு | முதுகுநாண் இல்லை |
| முதுகுப்புற உள்ளீடற்ற நரம்பு வடம் உண்டு | ஒரு இணை வயிற்றுப்புற திட நரம்பு வடம் உண்டு |
| தொண்டை செவுள் பிளவுகள் காணப்படுகின்றன | செவுள் பிளவுகள் இல்லை |
| இதயம் வயிற்றுப்புறத்தில் காணப்படுகிறது | இதயம் இல்லை இருந்தால் அது முதுகு புறத்திலோ, பக்கவாட்டிலோ அமைந்துள்ளது |
| மலத்துளைக்கு பின் அமைந்த வால் உள்ளது | அத்தகைய வால் இல்லை |
| உணவுக்குழல் நரம்பு வடத்திற்கு கீழே காணப்படுகிறது | உணவுக்குழல் நரம்புவடத்திற்கு மேலாகக் காணப்படுகிறது. |

**(ஏதேனும் ஐந்து)**

**(அல்லது)**

**ஆ**

**தோலில் காணப்படும் உணர்வேற்பிகள்**

**1. மெர்கல் வட்டுகள்–** எபிடெர்மிஸ் அடுக்கில் ஆழ்பகுதியில் மென்மையான தொடுதல்களை உணரக்கூடியவை.

**2. மயிர்க்கால்களைச் சுற்றியுள்ள நுண்பைகளில் உள்ள உணர்வேற்பிகள்**– மெல்லிய தொடுதல்களை உணரக்கூடியவை.

**3. மீஸ்னரின் துகள்கள்**

- இவை தோல் பாப்பில்லாக்களின் எபிடெர்மிஸ் அடுக்கின் கீழ் அமைந்துள்ளன
- விரல் முனைகள் மற்றும் பாதங்களில் அதிகம் காணப்படுகிறது

**4. பாசினியன் துகள்கள்**

- டெர்மிஸின் ஆழ் பகுதியில் உள்ளன
- இவை வலி, கடினத்தன்மை, வெப்பம் மற்றும் வேறுபட்ட தொடுபரப்புகளை உணரும் தன்மையைத் தருகின்றன.

**5. ரபினி முனைகள்**

- இவைகள் டெர்மிஸ் பகுதியில் உள்ளன.
- தொடர் அழுத்தத்தை உணருகின்றன

**6. கிராஸ் முனைக்குமிழ்கள்**

- இவை வெப்பத்தை உணரும் வெப்ப உணர்வேற்பிகள் ஆகும்

**(ஏதேனும் ஐந்து)** 5



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| 21. அ | **<u>சுவாச மண்டலத்தின் பணிகள்</u>**<br>1. வளிமண்டலத்திற்கும் இரத்தத்திற்கும் இடையே $O_2$ மற்றும் $CO_2$ ஆகியவற்றைப் பரிமாற்றம் செய்தல்.<br>2. உடலின் $p^H$ அளவை நிலைப்படுத்திப் பேணுதல்.<br>3. உட்சுவாசத்தின் போது உள்ளிழுக்கப்பட்ட நோயூக்கிகள் மற்றும் மாசுப்படுத்திகளிடமிருந்து நம்மைப் பாதுகாத்தல்.<br>4. இயல்பான குரலொலிக்கான குரல் ஒலி நாண்களை (Vocal cords) பராமரித்தல்.<br>5. செல் சுவாசத்தால் உருவாக்கப்படும் வெப்பத்தைச் சுவாசத்தின் மூலம் வெளியேற்றல்.<br>**(அல்லது)** | 1<br>1<br>1<br>1<br>1 | 5 |

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| ஆ | **தசைச் சுருக்கத்தின் வரிசைக்கிரமமான நிகழ்வுகள்** | | |
| | மைய நரம்பு மண்டலத்திலிருந்து கிடைக்கும் சமிக்ஞைகளால் தசைச் சுருக்கம் துவங்குதல் | $^1/_2$ | |
| | ↓ | | |
| | நரம்பு தசை சந்திப்பில் அசிடைல் கோலைன் வெளிவிடப்படுதல் | $^1/_2$ | |
| | ↓ | | |
| | தசை இழைகளில் செயல் மின்னாற்றல் உற்பத்தியாதல் | $^1/_2$ | |
| | ↓ | | |
| | சார்கோபிளாச வலையிலிருந்து கால்சியம் அயனிகள் வெளியீடு தூண்டப்படுதல் | $^1/_2$ | |
| | ↓ | | |
| | கால்சிய அயனிகள் டிரோபோனின் உடன் இணைதல்: ஆக்டின் இழையில் உள்ள இணைப்பு இடங்களை டிரோபோமையோசின் திறந்து வைத்தல் | $^1/_2$ | |
| | ↓ | | |
| | ஆக்டின் இழையில் உள்ள மையோசின் இணைப்பிடங்கள் வெளிப்படுத்தப்படுதல்: மையோசினின் தலைப்பகுதி அவ்விடங்களில் இணைதல் | $^1/_2$ | |
| | ↓ | | |
| | மையோசின் தலைப்பகுதி ஆற்றல் மிகு விசை இயக்கத்தை (Power Stroke) மேற்கொள்ளல் | $^1/_2$ | |
| | ↓ | | |
| | ஆக்டின் இழை சார்கோமியரின் மையப்பகுதிக்கு நகருதல் (தசைச் சுருக்கம்) | $^1/_2$ | |
| | ↓ | | |
| | மைய நரம்பு மண்டல சமிக்கைகள் நின்று போதல்; கால்சியம் அயனிகள் மீண்டும் சார்கோபிளாச வலையினுள் செலுத்தப்படுதல் | $^1/_2$ | |
| | ↓ | | |
| | டிரோபோமையோசின் மீண்டும் ஆக்டின் இழையிலுள்ள இணைப்பிடங்களை மூடுதல் | $^1/_2$ | |
| | (அல்லது)<br>சறுக்கு இழைக் கோட்பாடு (விளக்கம்) | | 5 |



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com